# ஸ ே ஸ மி ர ா.

'ஸேஸமிரா' என்றால் என்ன வென்பது எல்லாருக்கும் நன்றாய்த் தெரியும். ஒரு காரியம் ஸந்தேகமாக இருந்து, ஆகுமென்றாவது, ஆகாதென்றாவது நிச்சயமாய்ச் சொல்லுவதற்கு இடமில்லாம லிருந்தால், காரியம் இழுப்பாயிருக்கிறதென்றும், ஸேஸமிராவாயிருக்கிறதென்றும் சொல்லுவது வழக்கம். அநேகமாய் எல்லாருக்கும் வார்த்தையின் உபயோகம் நன்றாய்த் தெரியும். ஆனால் ஏன் இழுப்பாயும், ஸந்தேகமாயுமிருக்கிற காரியங்களுக்கு ஸேஸமிராவென்று சொல்லுவதென்பது அநேகர்களுக்குத் தெரியாது. 'ஸேஸமிரா' என்கிற வார்த்தையில் நாலு அக்ஷரங்கள் இருக்கின்றன. அந்த நான்கு அக்ஷரங்களும் நான்கு நீதிகளடங்கிய ஸம்ஸ்க்ருத ச்லோகங்களின் முதல் அக்ஷரங்களாகும். அந்த நீதிகள் என்ன என்பதை கவனிப்போம்.

வெகு காலத்திற்கு முன், இந்தியா தேசமானது 56 தேசங்களாக பிரிக்கப்பட்டிருந்தது. அவைகளில் "விசாலா" என்ற பெயருடைய பெரிய தேசம் ஒன்று உண்டு. அதற்கு முக்ய பட்டணம் உஜ்யயனி. அதிலிருந்துதான் பூர்விக இந்திய வான சாஸ்த்ர வித்பன்னர்கள், பூ ரேகைகளை கணித்து வந்தார்கள். நீர்வளம், நிலவளம் பொருந்திய அந்த தேசத்தில்

'நந்தன்' என்று மிகவும் கீர்த்திபெற்ற ஒரு அரசன் அரசு புரிந்துவந்தான். அவன் தன்னுடைய பராக்ரமத்தினால் இதர ராஜாக்கள் எல்லாரையும் ஜயித்து அவர்களையெல்லாம் தனக்குக் கீழ்ப்படிந்தவர்களாயும், தனக்குக் கப்பங் கட்டவேண்டியவர்களாயும் செய்துவிட்டான். இந்தியா முழுவதும் ஒரே ஆட்சிக்குள் அடங்கிவிட்டது. ஜனங்களை ஸந்தோஷப் படுத்துவதிலும், அவர்களை த்ருப்திப் படுத்துவதிலும், அவனுக்கு ப்ரீதி அதிகமாயிருந்ததினால், 'நந்தன்' என்னும் பெயர் அவனுக்குக் காரணப் பெயராகவே ஆயிற்று. அவனுக்கு "பகுச்ருதன்" என்ற மந்த்ரி ஒருவனிருந்தான். "பகுச்ருதன்" என்கிற ஸம்ஸ்க்ருத பதத்திற்கு ரொம்ப விஷயங்களை நன்றாய்க் கேட்டு அறிந்தவன் என்று அர்த்தம். ராஜாவின் பட்ட மகிஷிக்கு 'பானுமதீ' என்றுபெயர். ராஜகுமாரன் பெயர் 'ஜயபாலன்.'

நந்த மகாராஜாவுக்கு ஸதா பானுமதியைப் பற்றியேதான் நினைவு. அவளை விட்டு ஒரு க்ஷணங்கூடப் பிரிந்திருக்க மாட்டான். தான் எவ்விடம் போனாலும், அவளையும் கூடவே அழைத்துக்கொண்டு போவது வழக்கம். ராஜ ஸபையிலுங்கூட அப்படியே அவளுடன் ஸிம்மாஸனத்தில் உட்காருவது வழக்கம். இதைப் பார்த்துவந்த மந்த்ரி நாலுவேதம், ஆறுசாஸ்த்ரம், 64 கலைகள் ஆகிய இவைகளைக்கற்றவனாதலாலும், அவைகள் ராஜ ஸ்த்ரீகள் ஸூர்யனைக்கூடப் பார்க்கக் கூடாது என்று முறையிடுகிறபடியாலும், அரசன் செய்வது அசாஸ்த்ரம் என்று மிகவும் வருத்தப்பட்டான். அந்த ஸமாசாரத்தை அரசனிடம் சொல்லாம

விருக்கவும் மனஸு ஸகிக்கவில்லை. சொல்வது எப்படி என்று பலவாறும் யோசித்து, கடைசியாய் நல்ல ஸமயம் பார்த்து அரசனிடத்தில் மிகவும் வினயத்துடன் தெரிவித்தான். அரசனும் அதை சரியென்று ஒத்துக்கொண்டான். ஆனால் பானுமதி பக்கத்திலில்லாமல் ஒரு நிமிஷங்கூடத் தன்னாலிருக்க முடியாதென்றும், அப்படி அவளை விட்டுப் பிரியாமலிருப்பதற்கும், மந்த்ரி சொல்லும் ப்ரகாரம் நடப்பதற்கும், ஏதாவது உபாயம் உண்டானால் சொல்லும்படி அரசன் மந்த்ரியைக் கேட்டான். மந்த்ரி வெகு காலம் யோசித்து பின்வரும் பதிலை ராஜனிடத்தில் தெரிவித்துக்கொண்டான்.

"மகாராஜாவே! நம்முடைய நாட்டில் மிகவும் ஸமர்த்தர்களான சில்பிகள் இருக்கிறார்கள். பார்த்த ரூபத்தை அதே ப்ரகாரம் எழுதுவதில் மிகவும் ஸாமர்த்யசாலிகள். அவர்களைக்கொண்டு பானுமதி மாதிரி ஒரு பிம்பத்தை செய்வித்து, அதை எப்பொழுதும் பக்கத்தில் வைத்துக் கொள்வதினால் யாதொரு விதமான பிசகும் ஏற்பட மாட்டாது"

அதைக் கேட்ட அரசன் தனது மந்த்ரியின் புத்தி சாலித்தனத்தை மிகவும் மெச்சி, அப்படிச் செய்வதே மிகவும் நல்லதென்று எண்ணி, அதன் ப்ரகாரம் தேர்ந்த சில்பி ஒருவனுக்கு உத்தரவு அளித்தான். அந்த சில்பி மிகவும் வேகத்துடன், தான் கற்ற வித்தையை எல்லாம் நன்றாய்க் காட்டி, நல்ல பிம்பத்தை அதி சீக்ரமாகவே செய்து முடிக்க யத்தனித்தான். அரசன் தினந்தோறும் பிம்பத்தைக் குறித்து விசா

ரணைகள் செய்துகொண்டே வந்தான். கடைசியாய் ஒரு நாள் எல்லா வேலையும் ஆய்விட்டதென்றும், நெற்றியில் திலகம் மட்டிலும் வைக்கவேண்டுமென்றும், பாக்கியா யிருக்கிற திலகம் வைக்கவேண்டியதையும் முடித்து, குறிப்பிட்ட தினத்தில் ராஜ ஸபையில் சேர்ப்பதாயும் சில்பி அரசனிடம் தெரிவித்துக் கொண்டான். சில்பி தன் வேலை முழுவதும் ஆகிவிட்டதென்று எண்ணி, நெற்றியில் ஒரு நல்ல திலகத்தை வைக்கப் போனான். எப்படி ஒரு ஸ்திரீ, தலையை வாரி, குளித்து, ஆடை ஆபரணங்கள் தரித்து, கடைசியாய்த் தன் நெற்றிக்கு பொட்டு வைத்துக்கொள்வாளோ, அதே ப்ரகாரம், பிம்பத்துக்கு நெற்றியில் பொட்டு வைப்பது வேலை முடிந்ததிற்கு அடையாளம். சில்பி, பொட்டை நெற்றியில் வைத்ததும் அது ஒட்டவில்லை. பலவாறு முயன்றும் கீழேயே விழுந்துவிட்

அது இடது தொடையின்மேல் விழுந்தது. எந்த விதம் வைக்க முயன்றாலும் அங்கேயே அது விழுந்தது. கடைசியாய் சில்பிக்கு என்ன செய்வது என்று விளங்கவில்லை. மதி மயங்கித் திகைத்தான். கடைசியாய் நாம் இந்த வேலையைச் செய்து முடிக்காவிட்டால், அரசன் மிகவும் கடுமையான தண்டனையை நமக்கு விதித்துவிடுவானென்று பயந்து, காலையில் எழுந்து, வாசல் கதவைத் தாளிட்டுவிட்டு, ஒருவரும் அறியாத வண்ணம் கொல்லைப் பக்கமாக வேறே எங்கேயாவது போய் வயிறு வளர்க்கலாமென்று எண்ணிப் புறப்பட்டான். இவ்வளவு நாளாய் அரசனுடைய ப்ரீதியும், ஸந்தோஷமும்

தென்று நாளுக்கு நாள் மிகவும் ஊக்கத்துடனும், உத்ஸாகத்துடனும் வேலை செய்துவந்த சில்பிக்கு, பொட்டு நெற்றியில் ஒட்டாத காரணத்தால் ராஜ்யத்தை விட்டுப் போகும்படி ஆகிவிட்டதே என்று மிகவும் வருத்தமுண்டாயிற்று. முகக் களைகளெல்லாம் மாறிவிட்டன. சில்பி குரங்கு சாகக் கொடுத்த ஆண்டி மாதிரி ஆகிவிட்டான். இவ்வளவு அலங்காரத்துடன் அவன் அதிகாலையில் ஊருக்கு வெளியே போய்க் கொண்டிருந்தான். அப்பொழுது, அந்த அரசனின் முக்ய குருவாகிய சாரதானந்தர் ஊருக்கு வெளியே ப்ராத ஸ்நானத்திற்காகப் போய்க்கொண்டிருந்தார். அவர் அந்த சில்பியைக் கண்டதும் அவ்வளவு காலையில் சில்பி வெளியில் போவதன் காரணத்தைக் கேட்க, சில்பி நடந்த வ்ருத்தாந்தம் முழுவதையும் குருவினிடத்தில் அதிக வணக்கத்துடன் தெரிவித்துக் கொண்டான். உடனே புறப்பட்டுப் போக குருவை உத்தரவு கேட்டான். குரு ஒன்றுக்கும் பயப்பட வேண்டாமென்றும், தான் எல்லா விஷயங்களையும் சரிவர நடத்தி வைப்பதாயும், தேறுதல் சொன்னார். ப்ராமணர் வாக்கு பலிக்குமென்ற எண்ணத்தால் சில்பிக்கும் கொஞ்சம் மனஸுக்கு தைர்யம் ஏற்பட்டது. சாரதானந்தர் தமது அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டு, சில்பியுடன் அவன் வீட்டிற்குப் புறப்பட்டார். பிம்பம் மிகவும் அழகாயிருப்பதைப் பார்த்து மிகவும் ஆனந்தப்பட்டார். கடைசியாய் அவர் திலகத்தை எடுத்து நெற்றியில் வைக்கும்படி சொன்னார்.

இடத்தில் விழுந்தது. உடனே ப்ராமணர் "ராஜ ஸ்த்ரீ பத்மினீ ஜாதி யானதால், மர்ம ஸ்தானத்தின் அருகாமையில் ஒரு மச்ச மிருக்கவேண்டு மென்று சாஸ்த்ரம். அதை சில்பி பிம்பத்தில் காட்டாததினுல், திலகம் அதே இடத்தில் விழுந்து கொண்டு வருகிற" தென்று தனக்குள்ளே எண்ணினர். மர்ம ஸ்தானத்தின் அருகாமையில் ராஜ ஸ்த்ரீக்கு ஒரு மச்சமிருக்கிறதென்றும், அந்த இடத்தில் ஒரு மச்சத்தை வைக்கும்படிக்கும், பிற்பாடு நெற்றியில் திலகம் வைக்கும்படிக்கும் சாரதாநந்தர் சில்பிக்கு உத்தரவு அளித்தார். அப்படியே சில்பி செய்தான். மச்சமும் ஏற்பட்டு விட்டது. திலகமும் நெற்றியில் வைத்தாகி விட்டது. சில்பி சாரதானந்தரை மிகவும் ஸந்தோஷப்படுத்தி ஸாஷ்டாங்கமாய் நமஸ்காரஞ் செய்தான். ப்ராமணரும் வீடு போய்ச் சேர்ந்தார். சில்பி அரசனிடம்போய் தன் வேலை முடிந்துவிட்டதென்று தெரிவித்துக் கொண்டான். குறிப்பிட்ட நேரத்தில் பட்ட மகிஷியின் பிம்பமானது அரசனுடைய ஸபைக்கு தகுந்த மர்யாதையுடன்கொண்டு போய்ச் சேர்ப்பிக்கப்பட்டது. அரசனும் பார்த்து ஸந்தோஷப்பட்டு சில்பிக்கு தகுந்தபடி வெகுமான மளித்தான். இரண்டொரு நாள் கழிந்தபிற்பாடு, அரசன் சில்பியை நோக்கி, வேலையைப் பூராவும் சீக்ரமாகவே முடித்தும், திலகம் வைக்க ரொம்ப நாட்கள் ஆனதற்குக் காரணம் என்னவென்று விசாரித்தான். சில்பி திடுக்கிட்டு ஒன்றும் சொல்லாமல், என்ன சொல்வதென்று மயங்கி நின்றுன். பலவாறாக அரசு

கேள்வியை கழித்துவிடப் பார்த்தும், அரசன் பிடிவாதமாய்க் கேட்டபடியினால், ரொம்ப நடுக்கத்துடன் உள்ளதை உள்ளபடியே தெரிவித்தான். இதைக் கேட்டதும் அரசனுக்கு அளவற்ற கோபம் உண்டாயிற்று. கண்கள் இரண்டும் எட்டிப் பழம்போல் சிவந்து விட்டன. பேசவும் நாக்கு எழும்பவில்லை. உதடுகள் இரண்டும் துடித்தன. உடனே சில்பியை வெளியே போக உத்தரவு அளித்துவிட்டு, "சாரதானந்தருக்கும் நம்முடைய பட்ட மகிஷிக்கும் ஏதோ ரகஸ்ய ஸம்பந்த மிருக்கவேண்டும். இல்லாவிட்டால் மர்ம ஸ்தானத்திலிருக்கிற மச்சம் அவருக்குத் தெரிய ந்யாயமில்லை" என்று பலவாறும் யோசித்தான். இந்த மானக்கேடு வெளியில் பரவா வண்ணம், அந்த ப்ராமணரைக் கொல்லும்படிக்கு மந்த்ரிக்கு உத்தரவு அளித்தான். மந்த்ரி அரசனுடைய கோபத்தையும், அவ்விடத்தில் நடந்த ஸங்கதிகளையும் நன்றாய் அறிந்து, அந்தக் காலம் அரசனிடம் வாதாடக் கூடாதென்று எண்ணி, உத்திரவுப்படி தானே போய் கொலை செய்வதாய் ஒத்துக்கொண்டான். சாரதானந்தரை நோக்கிப் புறப்பட்டுப் போய், அவரிடத்தில் ஸங்கதிகளைத் தெரிவித்து, அவரை கொலைக் களத்துக்கு அழைத்துக்கொண்டு போனான். அவர் எது நடக்கவேண்டுமோ அது நடந்தே தீரும், நம்மால் ஒன்றும் மாற்ற முடியாதென்று, மனதை தைர்யப் படுத்திக் கொண்டு, விசாரமில்லாமல் கொலைக் களத்திற்குப் போனார்.

அவர் கடைசியாக, பின் வரும் ச்லோகத்தினால் ஈச்வரனைக் குறித்து த்யானித்தார்.

" வனே ரணே சத்ரு ஜலாக்னி மத்யே
மஹார்ணவே பர்வத மஸ்தகேவா |
ஸுப்தம் ப்ரமத்தம் விஷம ஸ்திதம்வா
ரக்ஷந்தி புண்யானி புரா க்ருதானி ||

அதாவது, "காட்டிலிருந்தாலும் சரி, மிகவும் உக்ரமாய்ச் சண்டை நடக்கும் யுத்தகளத்திலிருந்தாலும் சரி, சத்ருக்களுடைய மத்தியிலிருந்தாலும் சரி, ஜல மத்தியி லிருந்தாலும் சரி, கரடி, புலி, யானை, ஸிம்மம் முதலிய காட்டு ம்ருகங்களிருக்கிற இடத்திலிருந்தாலும் சரி, அல்லது மிகவும் ச்ரமத்துடன் ஏறக்கூடிய பர்வதங்களுடைய உயர்ந்த சிகரங்களி லிருந்தாலும் சரி, தூங்கிக்கொண்டிருந்தாலும் சரி, விழித்துக்கொண்டிருந்தாலும் சரி, கஷ்ட திசையிலிருந்தாலும் சரி, முன் ஜன்மாவில் செய்யப்பட்ட புண்யங்கள்தான் ஒரு மனிதனைக் காப்பாற்றுகின்றனவேயல்லாமல் வேறே யில்லை"

இதைக் கேட்ட மந்த்ரிக்கு, தான் செய்யப்போவதின் லாப நஷ்டம் தன்னையே பாதிக்கு மென்றும், அதன் பாபத்துக்கு தானே உள்ளாக வேண்டுமென்றும், அரசனும் சரிவர யோசித்து உத்தரவை அளிக்காததினாலும், கோப ஸமயத்தில் கொடுக்கப்பட்ட உத்தரவாகையினாலும், அதை சரிவர நிறைவேற்றாததினால் தனக்கு ராஜ த்ரோகம் ஏற்படமாட்டாது என்றும், பலவாறாக யோசித்து சாரதாநந்தரைநோக்கி, தான் செய்த தப்பிதத்தை க்ஷமித்துக்கொண்டு, அவரை தன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டுபோய், ஒரு ரகஸ்யமான இடத்தில் வைத்து, மிகவும் மர்யாதை

யாய் நடத்தி வந்தான். பிறகு, மந்த்ரி அரசனிடம் வந்து, தானே நேரில் ப்ராமணரைக் கொன்று விட்ட தாகத் தெரிவித்தான். அரசனும் மிகவும் ஸந்தோ ஷத்துடன் மந்த்ரியினுடைய குணங்களை மெச்சி, அவ னுக்கு வேண்டியபடி இனும் கொடுத்து அனுப்பினான்.

இந்த ஸமாசாரம் நடந்து அநேக நாட்கள் கழிந்த பிறகு, ஒரு நாள் அரச குமாரனாகிய ஜயபாலன் வேட்டைக்குப் புறப்பட்டான். அப்பொழுது அநேக விதமான அபசகுனங்கள் ஏற்பட்டன. அவ்வளவு அப சகுனங்களையும் கவனியாமல் வேட்டைக்கு அவச்யம் போய்த்தான் தீருவதாயிருந்தான். அவனுக்கு மந்த்ரி யின் புத்ரன் ஸ்நேகிதன். அவனையும் தன்னுடன்கூட வரும்படி கேட்டுக்கொண்டான். அவன் பலவிதமான க்ரந்தங்களை யெல்லாம் பார்த்தவனாகையினால், தான் வரமுடியாதென்று சொன்னதோடுகூட, ராஜ குமா ரனையும் பலவிதமாய்ச் சொல்லி தடுக்க முயன்றான். என்ன செய்தும் பயன்படவில்லை. ராஜகுமாரன் வேட் டைக்கு அதிவேகமாய் ரொம்பவும் கோபத்துடன் புற ப்பட்டுவிட்டான். பின்னாலே வரும் ஸைன்யங்களைக் கூட கவனியாமல் வெகுதூரம் போய்விட்டான். காண் டாம்ருகம், புலி, ஸிம்மம், யானை, சிறுத்தை முதலிய துஷ்ட ம்ருகங்க ளிருக்கும் காட்டை நோக்கிச் சென் றான். காட்டிற்குள் வெகுதூரம் போய்த் திரும்பிப் பார் த்தான். ஸைன்யமானது வெகு தூரத்துக்கு அப்பால் வருவதாய்க் காணப்பட்டது. தானும் தன் குதிரை யும் தனிமையாய் வந்ததைப்பற்றி விசாரப்பட்டுக் கொண்டு நாலா பக்கமும் பார்த்தான். பயம்

டாயிற்று. பார்க்கப் பார்க்க பயம் அதிகரித்தது. நினைக்க நினைக்க வருத்தம் மேலிட்டது. ரொம்ப தூரம் அதி வேகமாய் வந்ததினால் ச்ரமம் மிகவும் அதிகமாயிருந்தது. மனதை ஒரு விதமாய்த் தேற்றிக் கொண்டு, குதிரையை விட்டு இறங்கி, அதை ஒரு மரத்தில் கட்டினான். தானும் வேண்டிய மட்டும் தீர்த்தம் குடித்துவிட்டு அந்த மரத்தடியிலேயே இளைப் பாறினான். ராஜாவின்பின் வந்த ஸைன்யத்துக்கு கொஞ்ச தூரம் வந்த பிறகு, எந்த வழியாய் ராஜ குமாரன் போனானென்பது விளங்கவில்லை. வழிகள் பலவாறாய்ச் சென்றன. ஆகவே ஸைன்யம் ஒன்றும் தெரியாமல் கடைசியாய் அந்த இடத்திலேயே ராஜ குமாரனின் வரவை எதிர்பார்த்துக் கொண்டு நின்று விட்டது. ஸைன்யத்தின் விசாரம் ராஜகுமாரனைக் காணோமே என்பது. ராஜகுமாரனின் விசாரம் இன் னும் ஸைன்யம் வந்து சேரவில்லையே என்பது. "என்ன செய்வோம். தனிமையாய் இந்த பயங்கர மான காட்டில் அகப்பட்டுக்கொண்டு விட்டோமே. இனி தப்பிப் பிழைத்தால்தான் நிஜம். அதுவரை நிச்சயமில்லை" என்று தன் மனதுக்குள்ளே ராஜ குமாரன் தீர்மானித்து விட்டான்.

இவன் இப்படி பலவாறாக யோசித்துக் கொண்டு ச்ரம பரிகாரம் பண்ணுமளவில், இடியைக் காட்டிலும் அதி பயங்கரமான ஒரு சப்தம் கேட்டது. உடனே திடுக்கிட்டு, உள்ளம் பதறி, நாக்கு உளறி, ஒன்றும் தெரியாமல் கண்களைத் திறந்து பார்க்குமளவில், ஒரு பயங்கரமான புலியானது தன்னை நோக்கி சற்று தூரத்

தில் வருவதைப் பார்த்தான். என்ன செய்வதென்று தோன்றவில்லை. உடனே பக்கத்து மரத்தின்மேலே ஏறி ஒளிந்துகொள்ளலாமென்று நினைத்து, உடனே ஏறிக் கொண்டான். குதிரையானது பயந்து அதிக விரைவாக ஓட்டம் பிடித்து வந்த வழியே போய் விட்டது. புலிக்கு அது அகப்படவில்லை.

மரத்தின்மேல் ஏறினதும் நாலா பக்கமும் சுற்றிப் பார்த்தான். ஒரு கரடி அவ்விடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தது. அவனைப் பார்த்ததும் அது அவனை நோக்கி வந்தது. அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. இந்த ஸ்திதியிலிருக்கும் ராஜகுமாரனைப் பார்த்து, மிகவும் பரிதபித்து, ஆபத்தில் உதவி செய்யும் அன்பனைப்போல் ஸமீபத்தில் வந்து கைகளை கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டது. பிடித்துக் கொண்டதும் ராஜகுமாரனுக்கு பயம் அதிகரித்து விட்டது.

கரடி—"ஏ, ராஜகுமார! நீ பயப்படாதே. நான் உனக்கு ஒருவிதமான தீங்கும் செய்ய மாட்டேன்" என்றது.

ராஜகுமாரன், "கரடி, நீ ஜனங்களைக் கொன்று ஜீவிக்கும் ஒரு வித துஷ்ட ம்ருகம். என்னுடைய விதிவசத்தால் நான் உன்னிடம் அகப்பட்டுக் கொண்டேன். நீயாக தயவுசெய்து விட்டாலும் சரி, அல்லது கெடுதல் செய்தாலும் சரி." என்றான்.

கரடி.—"சரணமென்று அடைந்தவனை விட்டு விடக் கூடாது. நான் துஷ்ட ம்ருகமாயிருந்தபோதிலும், நீ என்னை சரணமென்று அடைந்தபடியால், என்

உயிரைக் கொடுத்தாவது உன் உயிரைக் காப்பாற்று கிறேன். கொஞ்சமாவது பயப்படாமலிரு" என்றது.

இதைக் கேட்ட ராஜகுமாரன் கரடி ஒன்றும் செய்யாதென்று எண்ணி சீக்ரம் நித்ரை போய்விட்டான். நித்ரையுடன் கூடி யிருந்த ராஜகுமாரனை மிகவும் ஜாக்ரதையாய்க் கரடி ரக்ஷித்தது. இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த புலியானது, மரத்தடியி லிருந்து பின் வருமாறு செல்லிற்று.

"ஏ, கரடியே, நீயும் காட்டில் வஸிக்கும் ஒரு ஜந்து. நானும் அப்படியே. நாம் இருவரும் மனிதர்களைக் கொன்று காட்டில் வஸிக்கும் துஷ்ட ஜந்துக்கள். நாமிருவருக்கும் மனுஷ்யர்கள் ஸ்வபாவமான விரோதிகள். அப்படியிருக்க, நீ அவனை ரக்ஷிப்பது நமக்கே கெடுதலாய் முடியும்."

கரடி.—"ஏ, புலியே, நீ சொல்வதெல்லாம் உண்மையே. சரணமடைந்தவன் எப்பேர்ப்பட்டவனு யிருந்தபோதிலும், அவனை விட்டுவிடக் கூட தன்னுடைய நேர் விரோதியான ராவணனுடைய தம்பியாகிய விபீஷணர் சரணமடைந்தபோது, ஸ்ரீராமர் அவருக்குக்கூட அபயம் கொடுக்கவில்லையா? மேலும், யார் விச்வாஸ த்ரோகம் செய்தாலும், நம்பிக்கை த்ரோகம் செய்தாலும், அவன் சந்த்ர ஸூர்யர்களிருக்கும் வரையில் நரகத்திலே கிடக்கிறான் என்று பலவாறய் சாஸ்த்ரங்கள் முறையிடுகின்றன. ஆகையினால் நான் என் ப்ராணனைக் கொடுத்துக்கூட அவனை ரக்ஷிக்கப் போகிறேன்" என்றது.

புலி பலவாறுகக் கரடியினிடத்தில் வாதாடியும்

ஒன்றும் பயன்படவில்லை. இதற்குள் ராஜகுமாரனும் விழித்துக்கொண்டான். ராஜகுமாரன் விழித்துக் கொண்டதைப் பார்த்து, கரடியானது தான் மிகவும் களைத்திருப்பதாயும், கொஞ்சம் தூங்கப்போவதாயும் தெரிவித்துவிட்டு, ராஜகுமாரனை ஜாக்ரதையா யிருக்கும்படி சொல்லிற்று. ராஜகுமாரனும் ஒத்துக்கொண்டான். கரடி தூங்கிவிட்டது. ராஜகுமாரனைப் பார்த்து புலி, கரடியைக் கீழே தள்ளிவிடும்படியாயும், அப்படிச் செய்தால் கரடியைத் தான் தின்று போவதாயும், ராஜகுமாரன் க்ஷேமமாய் ஊர்போய்ச் சேரலாமென்றும் தெரிவித்தது. இந்த உபாயம் ராஜகுமாரனுக்கு மிகவும் சரியாகவே தோன்றிற்று. உடனே கரடியைத் தள்ளினான். அது திடுக்கிட்டு விழித்துக் கொண்டு, மற்றொரு கிளையைப் பிடித்துக்கொண்டுவிட்டது. கீழே விழவில்லை. அதைப் பார்த்த ராஜகுமாரனுக்கு பயம் ரொம்பவும் அதிகமாயிற்று. கண்டபடி புலம்பவும் அழவும் ஆரம்பித்தான். கரடிக்கும் கோபம் வந்தது. அது ராஜகுமாரனை கண்டபடி பேசி, "நீ செய்த பாபங்களின் பலனை நீயே அனுபவிக்க வேண்டும். நீ பயப்படுவதில் ப்ரயோஜனமில்லை. ஆகையினால் நீ 'ஸஸேமிரா' என்று சொல்லிக்கொண்டே பிசாசுகளைப் போலத் திரிய வேண்டும்" என்று சொல்லிவிட்டு, மரத்திலிருந்து கீழே இறங்கிப் போய்விட்டது. புலியும் தன் இருப்பிடம் போய்விட்டது. பொழுது விடிந்ததும் ராஜகுமாரன் "ஸஸேமிரா" என்று சொல்லிக்கொண்டே திரியலானான். குதிரையானது புறப்பட்ட இடத்

திற்கு யஜமானில்லாமல் வந்ததைக் கண்ட ஸைன்யங்கள் ராஜகுமாரனுக்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டதாக எண்ணி, மிகவும்வருத்தப்பட்டுக்கொண்டு, அரசனிடம் போய் நடந்த ஸமாசாரத்தைத் தெரிவித்தன. அவற்றைக் கேட்ட அரசனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. புலம்பினான். அழுதான். யார் என்ன ஸமாதானம் செய்தும் ஒன்றும் பயன்படவில்லை. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி வாடினான். தன் உயிரை விட்டுவிடுவது நல்லதென்று கதறினான். மந்த்ரி இவைகளை யெல்லாம் பார்த்துவிட்டு, ஸைன்யத்தைச் சேர்த்துக்கொண்டு ஜயபாலன் வேட்டையாடப் போனவழியைப் பார்த்து தேடப் புறப்பட்டான். அரசனும் கூடவே சென்றான். அவனுக்கு ஒரு க்ஷணங்கூட தனிமையாயிருக்கத் தோன்றவில்லை. ரத, கஜ, துரக, பதாதிகளுடன் கூடின ஸைன்யங்கள் கூடச் சென்றன. வெகுதூரம் அலைந்து திரிந்து கடைசியாய், பைத்யம் பிடித்து "ஸஸேமிரா" என்று சொல்லிக் கொண்டே திரிகிற பையனைப் பார்த்தார்கள். ஒரு விதத்தில் ஆனந்தமும், மற்றொரு விதத்தில் அளவில்லாத துக்கமும் உண்டாயிற்று. எல்லாருக்கும் ராஜகுமாரன் உயிருடன் அகப்பட்டு விட்டான் என்ற ஸந்தோஷம் மட்டிலும் அதிகமாயிருந்தது. அவனை ஊருக்கு அழைத்துக் கொண்டு வந்து விட்டார்கள். நாளுக்கு நாள் பையனைப் பார்க்கப் பார்க்க அரசனுக்கு வருத்தம் அதிகமாயுண்டாயிற்று. "சாரதானந்தர் இருந்தால் அதி சீக்ரத்தில் ஒரு உபாயத்தைச் சொல்லி வ்யாதியை

குணமாக்கி விடுவாரே. அவரை யோசியாமல் கொன்று விட்டோமே" என்று வருத்தப்பட்டான். கடைசியாய் எப்படியாவது பையன் வ்யாதியை குண மாக்குகிறவர்களுக்கு ராஜ்யத்தில் பாதி கொடுக்கத் தயாராயிருப்பதாய் எல்லாருக்கும் தெரிவிக்கும்படி மந்த்ரிக்கு கட்டளையிட்டான். மந்த்ரி அவைகளை யெல்லாம் தன் வீட்டில் ஒளிந்துகொண்டிருந்த சாரதானந்தரிடம் தெரிவித்தான். சாரதாநந்தர் தான் அதை சீக்ரம் ஸ்வஸ்தப் படுத்துவதாய் அரசனிடம் போய் தெரிவிக்கும்படிச் சொன்னார். மந்த்ரி தன் வீட்டில் ஒரு பெண் வந்திருப்பதாயும் அவளுக்கு உத் தரவு கொடுத்தால் அவள் இதை குணப்படுத்துவதாக சொல்லுகிறதாயும் சொன்னான். அதைக் கேட்ட அர சன் மிகவும் உத்ஸாகத்துடன் அவளை உடனே அழை த்து வரும்படி ஆஜ்ஞாபித்தான். உடனே ஸபையில் ராஜகுமாரனைக் கொண்டுவந்து நிறுத்தினார்கள். சார தானந்தர் என்ற பெண்ணை நடுவில் ஒரு திரைக் குள்ளே ஒருவருக்கும் தெரியாமல் மந்த்ரி உட்கார வைத்தான். உடனே பெண் வேஷம் பூண்ட சாரதா னந்தர் ராஜ குமாரனை நோக்கி பின் வரும் ச்லோகத் தைச் சொன்னார்.

ஸத்பாவம பரது பணறைம
வஞ்சநேகா விதக் ததா।
அங்க மாருஹ்ய ஸுப்தானும்
ஹனனே கிம்னு பௌருஷம்॥

(அர்த்தம்.) நல்ல ஸ்வபாவத்தை அடைந்த வர்களை வஞ்சிப்பதில் என்ன கெட்டிக்காரத்தன மிருக்

கிறது? (அவர்கள் சொன்னதை எல்லாம் சரி என்றே எண்ணப்பட்டவர்கள்.) நீயே சரணமென்று அடைந்து மடியின் மேல் தூங்குகிறவனை கொல்லுவதில் என்ன கெட்டிக்காரத்தன மிருக்கிறது? (ஒன்றுமில்லை என்பது கருத்து).

அதைக்கேட்டதும் ராஜபுத்ரன் 'ஸ' என்கிற பதத்தை விட்டுவிட்டு "ஸேமிரா" என்றான். அதன் பிறகு சாரதானந்தர் பின்வரும் ச்லோகத்தைச் சொன்னார்.

2. ஸேதும் த்ருஷ்ட்வா ஸமுத்ரஸ்ய
கங்கா ஸாகர ஸங்கமம் |
ப்ரும்மஹத்யா ப்ரமுச்யேத
மித்ர த்ரோஹீந முச்யதே ||

(அர்த்தம்.) என்ன பாபங்கள் செய்தாலும் ப்ராயச்சித்தம் உண்டு. ரொம்பவும் கெடுதலான ப்ரும்ம ஹத்யாதி பாபங்களை செய்தாலுங்கூட, ஸேதுக் கரையையும், கங்கா நதியும் ஸமுத்ரமும் சேருகிறதையும் கண்டுவிட்டால், பாபம் போய்விடும். ஆனால் மித்ர த்ரோகமாகிற பாபத்துக்கு ப்ராயச்சித்தம் கிடையவே கிடையாது.

இதன் மேல் ராஜகுமாரன் இரண்டாவது அக்ஷரமாகிற 'ஸே' என்கிறதை விட்டுவிட்டு, "மிரா" என்று சொல்லத் தொடங்கினான். அரசனுக்கு இதற்குள்ளே அளவற்ற உத்ஸாகம் உண்டாயிற்று. மறுபடியும் சாரதானந்தர் இன்னொரு ச்லோகத்தைச் சொன்னார். அது வருமாறு:

3. மித்ர த்ரோஹீ க்ருதக்நச்ச
யஸ்து விச்வாஸ காதக।
த்ரயஸ்தே நரகம் யாந்தி
யாவச் சந்த்ர திவாகரௌ॥

(அர்த்தம்.) மித்ரனுக்கு த்ரோகம் செய்கிறவனுக்கும், செய்த நன்றியை மறக்கிறவனுக்கும், நம்பிக்கை த்ரோகம் செய்கிறவனுக்கும், ஸூர்ய சந்த்ரர்களிருக்கிறவரையில் நரக முண்டு. அவர்கள் எப்பொழுதும் நரகத்திலேயே யிருப்பார்கள். அவர்களுக்கு மோக்ஷமே கிடையாது.

இதைக் கேட்டதும் ராஜ குமாரன் 'மி' என்பதை விட்டு விட்டு, 'ரா' என்று சொன்னான். சாரதானந்தர் நாலாவதாக ஒரு ச்லோகத்தைச் சொன்னார். அது வருமாறு.

4. ராஜன் போதவ புத்ரஸ்ய
யதி கல்யாண மிச்சஸி।
தானம் தேஹி த்விஜா திப்யோ
வர்ணானாம் ப்ராமணோ குரு:॥

(அர்த்தம்) ஹே, அரசனே! உன் பிள்ளைக்கு மங்களம் உண்டாக ஆசைப்படுவாயானால், ப்ராமணர்களின் பொருட்டு யதேஷ்டமாய் தானதர்மம் செய்யவேண்டும். ஏனென்றால், ப்ர்ம்ம, க்ஷத்ரிய, வைச்ய, சூத்ரர்களாகிய நான்கு வர்ணங்களிலும் ப்ராமணர்களே உத்க்ருஷ்டமானவர்கள்.

இதைக் கேட்டதும் ராஜகுமாரன் 'ரா' என்று சொல்வதை விட்டுவிட்டு, எல்லாரையும் போலப்

பேசத் தொடங்கினன். உடனே நடந்த வ்ருத்தாந் தத்தை அரசனிடம் தெரிவித்தான். அரசனும் அந் தப் பெண் யாரென்று பார்க்குமளவில், சாரதானந்த ரென்று தெரிந்தது. மந்த்ரியினிட மிருந்து சாரதா னந்தருடைய வ்ருத்தாந்தத்தையும் தெரிந்து கொண் டான். உடனே அரசன் சாரதானந்தரைப் பார்த்து, எப்படி இந்த வ்ருத்தாந்தங்களெல்லாம் அவருக்குத் தெரிந்ததென்று கேட்க, அவர் ஈச்வராநுக்ரகத்தால் தமக்குத் தெரிய வந்ததென்றும், அதேமாதிரிதான் பானுமதியின் மர்ம ஸ்தானத்திலுள்ள மச்சமும் தெரிய வந்ததென்றும், அறிவித்தார். உடனே அரசனும், ஜயபாலனும், பானுமதியுடன் சாஷ்டாங்கமாய் சார தானந்தரை நமஸ்காரஞ்செய்து, அவருடைய அநுக்ர கத்தைப்பெற்று, வெகுகாலம் ராஜ்ய பரிபாலனஞ் செய்து வந்தார்கள்.

எப்படி ஜயபாலனுக்குவந்த ஆபத்தை, தீர்க்க முடியுமோ, முடியாதோ வென்று நந்த மஹாராஜா ஸந்தேகப்பட்டு மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டிருக் கையில், கடைசியாய் புத்திமானன சாரதானந்தர் தீர்த்துவைத்து, அவனையும் அவன் தகப்பனரையும் ஸந்தோஷப்படுத்தினரோ, அதேமாதிரி அநேக கார் யங்கள் கடைசியில் நன்றாய் அநுகூலமானலும், மத்தி யில் ஜயபாலன் கதிமாதிரியாய் அநுகூலமாகுமென்ரு வது அநுகூலமாகாதென்ருவது சொல்லுவதற்கு வழி யில்லாமலிருக்கலாம். அப்படியிருக்கும் ஸமயத்தில் அந்தக் கார்யம் ஸஸேமிராவாயிருக்கிறதென்று சொல் வது வழக்கம்.

## நாவல்கள்.

### ஆரணி - குப்புஸாமி முதலியார் இயற்றியவை.

| | | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|---|
| 91. | மதனகாந்தி | ... | 1 | 0 | 0 |
| 69. | பத்மாஸனி | ... | 0 | 10 | 0 |
| 27. | சங்கநிதி அல்லது செல்வராஜன் | ... | 0 | 12 | 0 |
| 49. | பதுமநிதி | ... | 0 | 10 | 0 |
| 51. | தேவராஜ- | ... | 0 | 6 | 0 |
| 77. | மாண்டிக்ருஸ்டோ 1-ம் பாகம் | ... | 1 | 4 | 0 |
| | 2-ம் பாகம் | ... | 1 | 4 | 0 |
| 79. | ரங்கநாயகி அல்லது துப்பறியும் மூன்று நிபுணர்கள் | ... | 1 | 0 | 0 |
| 71. | கமலநாதன் அல்லது களவுபோன ரத்ன மாலை | ... | 1 | 0 | 0 |
| 63. | இந்த்ராணி அல்லது ரத்னபுரி ரகஸ்யம் | ... | 1 | 0 | 0 |
| 315. | லீலா அல்லது மங்கைபுர மாணிக்கம் | ... | 0 | 12 | 0 |
| 164. | கோஹார்ஜான் | ... | 0 | 8 | 0 |
| 155. | ஸ்ரீநிவாஸன் | ... | 0 | 6 | 0 |

### நடேச சாஸ்த்ரியார் இயற்றியவை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 41. | தானவன் | ... | 0 | 12 | 0 |
| 39. | கோமளம் குமரியானது | ... | 0 | 8 | 0 |
| 36. | தலையணை மந்த்ரோபதேசம் | ... | 0 | 8 | 0 |
| 42. | தீனதயாளு | ... | 0 | 6 | 0 |
| 45. | ஷேக்ஸ்பியர் நாடகக்கதைகள் | ... | 0 | 6 | 0 |
| 44. | மிருச்சகடி | ... | 0 | 4 | 0 |
| | வால்மீகி ராமாயணம் 6-காண்டம் | ... | 10 | 0 | 0 |
| 15. | ஷை பாலகாண்டம் | ... | 1 | 12 | 0 |
| 17. | அயோத்தியாகாண்டம் | ... | 3 | 0 | 0 |
| 16. | ஆரண்யகாண்டம் | ... | 1 | 12 | 0 |
| 21. | கிஷ்கிந்தாகாண்டம் | ... | 1 | 12 | 0 |
| 22. | சுந்தரகாண்டம் | ... | 1 | 12 | 0 |
| 23. | யுத்தகாண்டம் | ... | 3 | 0 | 0 |

### அ. மாதவய்யா இயற்றியவை.

| | | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|
| 349. | பத்மாவதி | ... | 1 | 4 | 0 |
| 347. | ஷை காலிகோ | ... | 1 | 8 | 0 |
| 351. | திருமலை ஸேதுபதி | ... | 0 | 8 | 0 |

### வ. உ. சிதம்பரம்பிள்ளை இயற்றியவை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 653. | மனம்போல வாழ்வு | ... | 0 | 8 | 0 |
| | அகமேபுறம் | ... | 0 | 8 | 0 |
| 710. | வலிமைக்கு மார்க்கம் | ... | 0 | 8 | 0 |
| 651. | மெய்யறம் | ... | 0 | 8 | 0 |
| 650. | சிதம்பரம்பிள்ளை பாடல் திரட்டு | ... | 0 | 8 | 0 |
| 655. | மெய்யறிவு | ... | 0 | 8 | 0 |
| 530. | இன்னிலை விருத்தியுரையுடன். | ... | 0 | 8 | 0 |
| 851. | திருக்குறள் மணக்குடவர் உரை | ... | 1 | 0 | 0 |

### வரகவி. திரு. அ சுப்ரமண்ய பாரதி எழுதிய புஸ்தகங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 499. | அரிச்சந்திரன் | ... | 0 | 10 | 0 |
| 602. | உத்தரன் | ... | 0 | 3 | 0 |
| 537. | ஸாவித்திரி | ... | 0 | 4 | 0 |
| 540. | சந்திரஹாஸன் | ... | 0 | 2 | 0 |
| 536. | மரியாதைராமன் அல்லது பாலந்யாயாதிபதி | | 0 | 6 | 0 |
| 206. | ஜடாவல்லவர் | ... | 1 | 8 | 0 |
| 363. | கீசகன் அல்லது கற்பின் வெற்றி | ... | 0 | 8 | 0 |
| 361. | சுந்தரவல்லி | ... | 0 | 8 | 0 |
| 365. | பாலவிநோதினி | ... | 0 | 2 | 0 |
| 366. | பரதன் | ... | 0 | 5 | 0 |
| 367. | கர்னாடகயோகினிகதை முதற்பாகம் | ... | 0 | 4 | 0 |
| 539. | ஷை இரண்டாம பாகம் | ... | 0 | 5 | 0 |
| 134. | மதாலஸா | ... | 0 | 3 | 0 |

### ச. நா. மூர்த்தி முதலியார் இயற்றிய துப்பறியும் நாவல்களும், இதர கதைகளும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 253. | என் தந்தையார் | ... | 0 | 6 | 0 |
| 132. | தியாகராஜன் | ... | 0 | 8 | 0 |
| 141. | அம்பிகாபதி சரித்திரம் | ... | 0 | 4 | 0 |

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| 172. | நீல அறையின் அதிசயம் அல்லது காணமற்போன மாணிக்கம் ... | 0 | 6 | 0 |
| 185. | அம்புஜ விலாஸத்தின் அதிசய சம்பவம் ... | 0 | 8 | 0 |
| 252. | நாகரத்னம் அல்லது விஷக்குண்டூசி ... | 0 | 8 | 0 |

## இதர நாவல்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 488. | காதம்பரி ... | 1 | 12 | 0 |
| 92. | அம்ருத ஸஞ்சீவினி என்னும் டாலிஸ்மன் | 1 | 2 | 0 |
| 148. | வசீகரி ... | 1 | 0 | 0 |
| 267. | அனாதைச்சிறுவன் அல்லது குணசுந்திரன். | 1 | 0 | 0 |
| 447. | ஷைலா ... | 1 | 0 | 0 |
| 553. | சாணக்ய சாகஸம் அல்லது சந்தரகுப்த சரித்ரம் ... | 1 | 4 | 0 |
| 270. | பொற்றொடி ... | 0 | 13 | 0 |
| 435. | தங்கம்மாள் ... | 0 | 12 | 0 |
| 120. | பனங்குளம் ... | 0 | 12 | 0 |
| 373. | உதிரபாசம் அல்லது இரத்தன பவனி ... | 0 | 12 | 0 |
| 388. | பத்மினி ... | 0 | 12 | 0 |
| 487. | விஜயகாருண்யம் | 0 | 12 | 0 |
| 549. | அனுமான்ஸிங் ... | 0 | 12 | 0 |
| 271. | மனோன்மணி ... | 0 | 12 | 0 |
| 745. | கமலலோசனி ... | 0 | 12 | 0 |
| 725. | ஸற்குணசந்திரன் | 0 | 12 | 0 |
| 275. | கோவிந்தன் ... | 0 | 10 | 0 |
| 392. | ரமணி ... | 0 | 10 | 0 |
| 489. | மேகஸந்தேசம் ... | 0 | 10 | 0 |
| 552. | ஒற்றன் ... | 0 | 10 | 0 |
| 580. | ஞானாம்ருதம் ... | 0 | 10 | 0 |
| 125. | காமாக்ஷி அல்லது ஓர் கைம்பெண்ணின் கதி ... | 0 | 8 | 0 |
| 260. | ராஜாமணி ... | 0 | 8 | 0 |
| 391. | பீமன் அல்லது நால்வர் கையொப்பம் ... | 0 | 8 | 0 |
| 444. | புத்திமானே பலவான் ... | 0 | 8 | 0 |
| 450. | லக்ஷ்மி ... | 0 | 8 | 0 |

## உயர்ந்த தமிழ் நாடகங்கள்.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| 30. | ஹரிச்சந்த்ரன் ... | 3 | 8 | 0 |
| 720. | போஜசரித்திரம் ... | 2 | 8 | 0 |
| 32. | ஸகுந்தலை அல்லது காணாமற்போன கணையாழி ... | 1 | 8 | 0 |
| 302. | கண்ணகி ... | 0 | 14 | 0 |
| 573. | ஜானகி ... | 0 | 12 | 0 |
| 153. | பீஷ்மர் பிரும்மசர்யம் ... | 0 | 8 | 0 |
| 121. | தமயந்தி ... | 0 | 8 | 0 |
| 130. | வாஸந்திகை ... | 0 | 8 | 0 |
| 883. | பிருதிவிராஜன் ... | 1 | 0 | 0 |
| 303. | ஸுந்தராங்கி ... | 0 | 14 | 0 |
| 590. | கமலவதனா ... | 0 | 5 | 0 |

## இதர புஸ்தகங்கள்.

| | | | | |
|---|---|---|---|---|
| 834. | பக்தவிஜயம் ... | 3 | 0 | 0 |
| 431. | பக்தமாலாவசனம் ... | 3 | 8 | 0 |
| 659. | தியாகராஜ கீர்த்தனைகள் ... | 1 | 4 | 0 |
| 832. | ஹிந்துபாகசாஸ்த்ரம் (பெரியது) ... | 2 | 0 | 0 |
| 122. | தேசாபிமானிகள் சரித்ரம் ... | 0 | 12 | 0 |
| 182. | ஆர்யசரித்ரம் ... | 1 | 0 | 0 |
| 330. | மானிட மர்மசாஸ்த்ரம் ... | 5 | 0 | 0 |
| 490. | சாரங்கதர ஸம்ஹிதை ... | 3 | 0 | 0 |
| 571. | ஆபத்துகளில் முதல் உதவி ... | 0 | 8 | 0 |
| 329. | ஸங்கீத ரத்னாவளி ... | 3 | 0 | 0 |
| 691. | ராமநாடகக் கீர்த்தனை ... | 3 | 0 | 0 |
| 692. | நந்தனார்சரித்திரக் கீர்த்தனை ... | 1 | 8 | 0 |
| 406. | ஸங்கீத சித்ராம்பரி ... | 1 | 0 | 0 |
| 491. | தக்ஷிணாத்யகானம் 4-பாகம் ... | 3 | 0 | 0 |
| 163. | மானஸமர்ம சாஸ்த்ரம் 1-ம் பாகம் மனோவைச்ய சாஸ்த்ரம் ... | 3 | 0 | 0 |
| 20. | ஸாமுத்ரிகா லக்ஷணசாஸ்த்ரம் ... | 1 | 8 | 0 |
| 852. | ரத்னப்ரகாசம் ... | 0 | 8 | 0 |
| 782. | துளஸிதாஸ் ராமாயணம் ... | 3 | 4 | 0 |

இதில் அநேக வேடிக்கைக் கதைகளும் ஸம்பாஷணை களும அடங்கியிருக்கின்றன. பாடசாலைகளில் உபாத்யாயர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பிள்ளைகள் கூறும் சாதுர்யமான மறுமொழிகள், கோர்ட்டுகளில், ஸாக்ஷிகள், வக்கீல்கள், ஜட்ஜுகள் முதலியவர்களுக்குள் நடக்கும் வேடிக்கையான ஸம்பாஷணைகள், காதலர் காதலிகளுக்குள் நடக்கும் ஹாஸ்ய மும் சருங்காரமுமான ஸம்பாஷணைகள், சிலர் தங்களை ஸமர்த்தர்களென்று மதித்துப் பேசும் அசட்டுப் பேச்சுகள் முதலிய அநேக வேடிக்கைக் கதைகள் அடங்கியிருக்கின்றன. மொத்தம் 160 கதைகளும் ஸம்பாஷணைகளும் அடங்கியுள்ளன.

இதன் விலை அணா 6.

## பெற்ற மனம் பித்து.

இது க்ராமவாழ்க்கையின் இயல்பை விளக்கிக்காட்டும் ஒரு சிறு கதை.

பிள்ளையினிடம் வாஞ்சையுள்ள ஒரு க்ராமமுன்ஸிபின் பிள்ளை அவரோடு கோபித்து ஓடிவிட, அவர் துக்கப்படுவதும், தேடப்போன ஆட்களின் விநோதப் பேச்சுகளும் நடவடிக்கைகளும், பாலர்களுடைய ப்ரதாபங்களும், இன்னும் க்ராம வாழ்க்கையைச் சேர்ந்த பல விஷயங்களும் இயற்கையில் உள்ளதுபோலவே எழுதப்பட்டிருப்பது வாசிக்க ரஸமாயிருக்கும்

இதன் விலை அணா 2.

## தாதாபாய் நௌரோஜி.

இறந்த காலஞ்சென்ற தாதாபாய் நௌரோஜியின் ஜீவிய சரித்ரமும், அவர் எழுதிய ஸ்வசரித்ரமும், அவரது குணாதிசய விவரங்களும், அவர் லௌகிக காலத்தில் வாழ்நாளைக் கழித்த விவரங்களும் அடங்கியிருக்கின்றன

இதன் விலை அணா 8.

வி. ஸ். வைத்யராமன் அண்ட் கம்பெனி.

புஸ்தக வியாபாரிகள், ஹைக்கோர்ட்டுக்கு எதிர்

**Approved by the Director of Public Instruction, Madras**

சென்னை வித்யா டிரெக்டரால் அங்கீகரிக்கப்பட்டது.

# ஐரோப்பிய யுத்தம்.

**100 பக்கங்கள் ! 100 படங்கள் !! 40 அத்யாயங்கள் !!!**

## விலை ரூ. 1-8-0.

இதில் ஒவ்வொரு தேசமும் யுத்தத்தில் சேர்ந்துகொண்டதற்கு அந்தரங்க காரணங்களும், அந்தந்த தேசத்து ராஜதந்த்ரக் கொள்கைகள் எவ்வளவுதூரம் யுத்தத்துக்குக் காரணமாயிருந்தன வென்பதும், சரித்ரபூர்வமாக விரிவாகவும், தெளிவாகவும் எழுதப்பட்டிருக்கின்றன. இன்னும், யுத்தவிஷயமாய் அறிய வேண்டிய பல விஷயங்களும் தெளிவாய் ஸுலபமான நடையில் பல படங்களுடன் எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றில் சில வருமாறு:—

யுத்தத்தில் சேர்ந்துள்ள தேசங்களின் அரசர்கள், மந்த்ரிகள், ஸேனாதிபதிகள், கப்பல்படைத் தலைவர்கள்.

ஸைன்யங்களின் அமைப்பு: காலாள்படை, குதிரைப் படை, பீரங்கிப்படை முதலியன.

பீரங்கிகளின் வகைகள் : மெஷின் பீரங்கிகள், க்விக் பயர், ஹார்ஸ் ஆர்ட்டிலரி பீரங்கிகள், ஹவிட்ஸர்கள், மலை பீரங்கிகள், குண்டுகள், ஷெல், ஷ்ராப்னல், வெடிமருந்து.

யுத்தக் கப்பல்கள் : ட்ரெட்னட், பாட்டில் க்ரூஸர், ஸாதாரண க்ரூஸர், டார்ப்பிடோ கப்பல்கள், டிஸ்ட்ராயர்கள், ஸப்மரீன் கப்பல், சுரங்கம்போடும் கப்பல்கள், சுரங்கம் வாறும் கப்பல்கள், கடல் சுரங்கங்கள், டார்ப்பிடோக்கள்.

கப்பல் பீரங்கிகள்: ஆகாய விமானங்கள், விளக்குக்கூண்டு, பலூன், டிரிஜிபில் பலூன், ஏரோப்ளேன்கள், மானோப்ளேன், பைப்ளேன், ஸெப்பலின், ஆகாயக் கப்பல்கள், ஹைட்ரோப்ளேன், ஆகாயவிமானங்களைச் சுட பீரங்கிகள், ஆகாயவிமானங்களுக்கு தீபஸ்தம்பங்கள், யுத்த அரசுகளின் ஆகாய விமான பலம்.

பழையகாலத்து கோட்டைகள் : தற்காலத்திய கோட்டைகள், கிடங்குகளி லிருந்துகொண்டு யுத்தம் செய்தல், ஸோல்ஜர்களுக்கு வைத்ய உதவி, ஸோல்ஜர்களுக்கு ஆகாரம் ஸப்ளை செய்தல்.

**எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி.,**

**புஸ்தக வ்யாபாரிகள், ஹைகோர்ட்டுக்கு எதிரில்,**

**3, 4, கொண்டிசெட்டித் தெரு, மதராஸ்.**